1972 பிப்ரவரி 1]

கோவை மாவட்டத்தில் சில இடங்களில் தண்ணீர் மிக ஆழத்தில் கிடைக்கிறது. அங்கே அவர்கள் ஆராய்ச்சி செய்தார்களா? இல்லாவிட்டால் ஆராய்ச்சி செய்வதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, சில பகுதிகளில் ஆராய்ச்சி நடத்துகிறார்கள். வறண்ட பகுதியில்கூட ஆராய்ச்சி நடத்துகிறார்கள். சூலூர் சிங்காநல்லூர் போன்ற பகுதிகளில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். அங்கு ஆராய்ச்சி செய்யப்பட்டு, குடிதண்ணீர்ப் பிரச்சினை நிறைவேற்றப்பட்டு வருகிறது.

* 238 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government is preparing a Water Atlas to show ground-water resources; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) & (இ) நில-நீர் பட ஏடு தற்பொழுது தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டுவரும் நிலநீர் ஆய்வுகள் முடிவடைந்தவுடன் அதாவது இன்னும் மூன்று ஆண்டுகள் கழித்துத் தயார் செய்யப்படும்.

செஞ்சி வட்டத்திலுள்ள நந்தன் கால்வாய்

* 239 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டத்தில் நந்தன் கால்வாயை புதிதாக தூர் வாரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தக் கால்வாயிலிருந்து பல கிளைக் கால் வாய்கள் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) நந்தன் கால்வாயைப் புதுப்பிக்கும் திட்டம்தான் அரசு பொதுப் பணித்துறை ஆணை: எண். 1947, நாள் 26—9—1970-ல் ரூ.31.89 லட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டு பூர்வாங்க வேலைகள் நடந்து வருகின்றன.

அஞ்சாம்பேடு சுண்ணாம்பு கால்வாய் அணைத்திட்டம்

* 240 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கும்மிடிப்பூண்டி துணை வட்டம், அஞ்சாம்பேடு சுண்ணாம்பு கால்வாய் சிறு அணைத் திட்டத்தை முடிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் பரிசீலனையில் இருக்கிறது.